Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 284
வியாழக்கிழமை
05 செப்ரெம்பர் 2024
ஆவணி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எப்பிடியெல்லாம் பொறிவைச்சு காசு பறிக்கினம் எண்டு பாத்தியளே"



# உள்நாட்டுப் பொறிமுறையில் தமிழருக்குப் பொறுப்புக்கூறல்

## நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்படும் அநுரகுமார தெரிவிப்பு

**கொழும்பு, செப்ரெம்பர் 5**

**எமது ஆட்சியில் நிறைவேற்று அதிகாரமுறை ஒழிக்கப்படும். அத்துடன், உள்நாட்டு பொறிமுறையினூடாக தமிழர்கள் எதிர்பார்க்கும் பொறுப்புக்கூறல், உண்மைத்தன்மை போன்ற விடயங்களை அமுல்படுத்துவோம் - என்று ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார தெரிவித்துள்ளார்.**

11

# நாடெங்கும் நேற்று தபால் வாக்களிப்பு

## அலுவலர்கள் ஆர்வம்!

வவுனியா, செப். 5

ஜனாதிபதித் தேர்தலிற்கான தபால் மூலமான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்றையதினம் ஆரம்பித்துள்ளது.

11

# ரணில் – சஜித் இருவரும் இணையவேண்டும்

## மன்றாடிக் கேட்கின்றேன் என அமைச்சர் அருந்திக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 5

நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்தி நாட்டை அழிவு பாதைக்குக் கொண்டு செல்லும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதையும், இளைஞர்கள் மூளைச்

11

## மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல்

# 4 குற்றவாளிகளுக்கு 66 மாதங்கள் கடூழியம்

மன்னார், செப். 5

மன்னார் நீதிமன்றத்தைத் தாக்கிய வழக்கில் 53 சந்தேகநபர்களில் 47 பேர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதுடன், 4 சந்தேகநபர்கள் ஒன்பது குற்றங்களுக்கு

11

# வட்டுக்கோட்டையில் விபத்து; முதியவரொருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப். 5

வட்டுக்கோட்டைச் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

11

# மாதகலில் படகு விபத்து! ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம் - மாதகல் கடற்பகுதியில் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மீனவரொருவர் காணாமற்போயுள்ளார்.

11

# 10 வயது மகள் மீது பாலியல் துன்புறுத்தல்

## தந்தை கைது

யாழ்ப்பாணம், செப். 5

தனது பத்து வயதான மகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஆசிரியரான தந்தை ஒருவர் நேற்றுப் புதன்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

12

# தேர்தலுக்கு இடையூறாக அமைச்சரவை தீர்மானங்கள்

தேர்தலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் அமைச்சரவைத் தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

விரிவு:- பக்:3

## ரிக்ரொக்கில் ஆசைகாட்டி


# புலம்பெயரிக்குப் பொறி; பெருந்தொகை மோசடி!

## மூன்று பெண்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 5

இளம் பெண்ணின் ரிக்ரொக் வீடியோக்களைப் பார்த்து ஏமாந்த 52 வயதுடைய ஒருவர் 45 இலட்சம் ரூபாவைப் பறிகொடுத்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. இந்த மோசடிச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப்

11



இ. ஜெயக்குமார்
யாழ்ப்பாணம்.
29.08.2024

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

ஐயா,

கருணை மனு

இளையதம்பி ஜெயக்குமார் ஆகிய நான் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவன். எனது சிறுபராயத்திலேயே தாய், தந்தையர் இறந்துவிட்டனர். உடன்பிறந்த சகோதரி ஒருத்தி நோய்வாய்ப்பட்டவர். திருமணம் ஆகி கொழும்பில் வாழ்கிறார். எனக்கும் அவருக்கும் தொடர்பு எதுவும் இல்லை. எனக்கு நிரந்தர வதிவிடமோ வருமானமோ அசையும் அசையா சொத்துக்களோ எதுவும் இல்லை. நான் ஆதரவற்ற ஒருவன். இந்நிலையில் தற்போது நான் நோய்வாய்ப்பட்டு எனது ஒரு காலை இழந்துள்ளேன். இந்நிலையில் முதியோர் இல்லங்கள் எதுவும் எனக்கு இடந்தருவதாக இல்லை. தற்போது மாசிப்பிட்டி வீதியிலுள்ள உதயதாரகை சனசமூக நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றேன். எனக்கு வாழ வழியில்லை. ஆதரவுக்கு எவரும் இல்லை. காலை இழந்ததால் எங்கும் செல்ல முடியவில்லை. இதனால் அரச உதவியுடன் எனக்கு ஆதரவுக்கரம் நீட்டி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இயலாத பட்சத்தில் என்னை கருணைக் கொலை புரிந்து உதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
× இ.ஜெயக்குமார்

பிரதிகள்:
- ஆளுநர் - வடக்கு மாகாணம்
- பணிப்பாளர் - யாழ் போதனா வைத்தியசாலை
- கிராம உத்தியோகத்தர், J/83 கொட்டடி

# கைவிடப்பட்ட என்னை கருணைக்கொலை செய்யுங்கள்

## முதியோர் இல்லங்களால் புறக்கணிக்கப்பட்ட முதியவரின் கண்ணீர்க்கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 5

நோய் வாய்ப்பட்டு ஒரு காலை இழந்து, எந்தவொரு முதியோர் இல்லத்தாலும் பொறுப்பேற்கப்படாத நிலையில் உள்ள என்னை, குறைந்த பட்சம் கருணைக்கொலையாவது செய்யவேண்டும் என்று முதியவர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார். இளையதம்பி ஜெயக்குமார்

11

மக்கள் மனம் வென்ற தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி

கிளிநொச்சி, செப்.5

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்று இன்று உதயமாகவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவு அணி எம்.பி.க்கள் இணைந்தே இந்தக் கூட்டணியை உருவாக்குகின்றனர்.

அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டணியின் பொதுச்செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரண நியமிக்கப்படவுள்ளார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டு கட்சியின் ரணில் ஆதரவு உறுப்பினர்கள் இந்தக் கூட்டணியின் கீழ் தான் போட்டியிடவுள்ளனர். (ச-44)



## வடக்கு - கிழக்கில் துரித அபிவிருத்தி

### சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு பலமான அபிவிருத்தித் திட்டங்களுக்காக நாட்டை முன்னெடுத்துச் செல்வதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்த வடக்கு - கிழக்கை மையமாகக் கொண்டு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் தெரிவித்தார்.

ஒரே நாட்டுக்குள் அதிகாரம் பகிரப்பட்டு, இதுவரை இல்லாமல் போயிருந்த மாகாணசபை உறுப்புரிமையும் பெற்றுத் தருவோம். இந்த அதிகாரங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்கு இடமளிக்க போவதில்லை.

வட மாகாணத்தில் தொழிற்சாலைகள் உருவாக்கப்படாமல் தொழில் வாய்ப்புகள் இல்லாதுள்ளன. கல்வியிலும் சுகாதாரத்திலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே உற்பத்திக் கொள்ளளவின் மூலம் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## வரிசையுகம் சதித்திட்டம்!

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

கோத்தாபய ஆட்சிக்காலத்தில் சதித்திட்டம் ஊடாகவே வரிசை யுகம் ஏற்படுத்தப்பட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சவாலான சந்தர்ப்பத்திலும் நாம் நாட்டைக் காட்டிக்கொடுத்ததில்லை. வரிசை யுகத்துக்கு நல்லாட்சி அரசாங்கமும் பொறுப்புக்கூறவேண்டும்.

நாட்டில் வரிசையுகம் ஏற்படுவதை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வரமுடியும். அதே போல் மக்களால் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவிலேயே வரியை நடைமுறைப்படுத்துவோம் என்றும் குறிப்பிட்டார். (ச)

## செப்ரெம்பர் 7, 8, 9 இல் வேட்பாளர்கள் விவாதம்

கொழும்பு, செப்.5

ஜனாதிபதி வேட்பாளர்களின் நேரடி விவாதத்துக்காக அனைத்து நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கான திகதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று மார்ச் 12 இயக்கத்தின் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த விவாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களின் பங்கேற்புடன் இந்த விவாதத்தின் முதல் சுற்று எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும்.

இந்த விவாதத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது சுற்றுகளில் சுமார் 12 வேட்பாளர்கள் பங்கேற்பார்கள்.

இந்த விவாதத்தில்கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, பொதுஜன பெரமுனவேட்பாளர் நாமல் ராஜபக்ச, தமிழ் பொது வேட்பாளர் அரியநேந்திரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் மார்ச் 12 இயக்கத்தின் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. (ச-6)




## உறுதிமொழிகளுக்கு சட்டம்

### தே. ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்படும் உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட வேண்டியது எமது ஆட்சியின்கீழ் கட்டாயமாக்கப்பட்டு அதுதொடர்பில் சட்டம் இயற்றப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள விடயங்களை ஆட்சிக்கு வந்த பின்னர் நடைமுறைப்படுத்தும் அரசியல் கலாசாரம் எமது நாட்டில் இல்லை. இதனை நாம் மாற்றியமைப்போம். ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகள் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்பது எமது ஆட்சியில் சட்டமாக்கப்படும். எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது கனவு மாளிகை கிடையாது. அது நடைமுறைப்படுத்தக்கூடிய விடயம்." - என்றார். (ச-44)

## அருந்திக்க 'பல்டி'


கொழும்பு, செப்.5

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவு அணியில் இணைந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரான அருந்திக்க பெர்னாண்டோ, தான் சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டை அழிக்கக்கூடிய சக்தியிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கக்கூடிய தரப்புகளுடன் இன்று முதல் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளேன்.

ஜனநாயக விரோதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்றிணையவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை ஐக்கிய மக்கள் கூட்டணியில் சங்கமிக்கவுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)



## கடவுச்சீட்டு நெரிசலுக்கு மன்னியுங்கள்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, செப்.5

கடவுச்சீட்டுப் பெறும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள நெரிசலை விரைவில் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு தொடர்பில் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன். ஏற்றுமதிப் பொருளாதாரத்துக்கு விரைவில் நாம் மாறாவிட்டால், 2035 முதல் 2040 வரையான ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மீண்டும் ஒரு நெருக்கடி நிலை ஏற்படலாம். அத்துடன், இனம், சாதி, மதம் அன்றி நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தலை எதிர்கொள்வதில், தாம் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## எதிர்க்கட்சி ஆசனத்தில் மொட்டு எம்.பி.

கொழும்பு, செப்.5

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொண்டார்.

அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அண்மையில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## சஜித்தை ஆதரிக்கும் விஜயகாந்த்

யாழ்ப்பாணம், செப். 5

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளதாக முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். உழைக்கும் பாட்டாளி மக்களுக்கு அரசியல் அதிகாரங்கள் வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாக முன்வைத்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார். (ஓ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு இடையூறு செய்யும் அமைச்சரவைத் தீர்மானங்கள்

## நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை



**கொழும்பு, செப்.5**

**தேர்தல் நடைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எடுக்கப்படும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான தேர்தல் நடைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்த அமைச்சரவைத் தீர்மானம் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் தேர்தல் நடைமுறைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவா என்பதை கண்டுபிடிப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு உள்ளது- என்றார். (ச)

## அனிசேரா நாடுகள் குழு தேர்தல் கண்காணிப்பில்

கொழும்பு, செப்.5

நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் அனிசேரா நாடுகளைச் சேர்ந்த குழுவினர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

அனிசேரா நாடுகளின் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லன்ட் தலைமையில் 14 பேர் கொண்ட குழுவினர் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

தேர்தலுக்கு முன்னரான நிலைவரம், வாக்களிப்பு, வாக்கெண்ணும் பணி போன்றவை கண்காணிக்கப்படவுள்ளன. தேர்தல் முடிந்த பின்னர் இவர்கள் தமது அறிக்கையை வெளியிடுவார்கள். (ச-25, 6)

## தொழில்நுட்பக் கற்கைக்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி !

கொழும்பு , செப்.5

ரோபோ தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற விடயங்களைக் கற்பிப்பதற்கு 7ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அமைச்சரவை இதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளது.

இவர்களுக்கு தொழில்நுட்பத் திறன், தகவல் தொழில்நுட்பம், உயிர் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம், கணிதம், போன்ற துறைகளில் மூன்று கட்டங்களாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கு மாகாண மட்டத்தில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களுக்கு தொழில்நுட்ப திறன் பல்கலைக் கழகத்தில் ஸ்கொட் வழங்கப்படவுள்ளது. (ச-22,6)

## மீன்பிடி மேம்பாட்டு மூலோபாயத் திட்டம்!

மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான மூலோபாயத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. 12 வீதம் மீன்பிடியை அதிகரிப்பதன் ஊடாக 2030 ஆம் ஆண்டு 600 மில்லியன் டொலரை வரியாகப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கம். மீன்பிடி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் ஜனாதிபதியும் இணைந்து இந்தத்திட்டத்தை முன்வைத்துள்ளனர். (ச-6)

## கசிப்புக் காய்ச்சியவர் தருமபுரத்தில் கைது

கிளிநொச்சி, செப்.5

தருமபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்புக் காய்ச்சிய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்திய உபகரணங்களும் 2ஆயிரத்து 613 லீற்றர் கோடாவும் 24 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (ரி-113,27)

## 158ஆவது பொலிஸ் தினம் யாழில் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், செப்.5

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 158 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் பொலிஸ் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது, ஆரியகுளத்தில் அமைந்துள்ள நாக விகாரையில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று பின்னர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் வீதியில் சென்ற பயணிகளுக்கு குளிர் பானம் மற்றும் சிற்றுண்டிகள் என்பன வழங்கப்பட்டன. (ச-22,27)





## தினம் தெரியுமோ?

சந்தனம் மிஞ்சினால் எங்கையோ தடவுற மாதிரி எங்கட ஆக்களுக்கு இப்ப காசும் மெத்திப்போய், கொழுப்பும் மெத்திப்போய் என்ன செய்யிறதெண்டே தெரியாமல் நிக்கினம். அதால பக்தியா செய்ய வேண்டியதுகளைக் கூட இப்ப பகிடியா, பகட்டா மாத்தத் தொடங்கிட்டினம். எங்கட வழிபாட்டு முறையில காவடியும் ஒண்டு. தங்களுக்கு ஏதாவது கஷ்டம் வந்தால் அதை தீர்க்கச் சொல்லியோ இல்லாட்டி ஏதும் நல்லகாரியம் நடக்கவேணும் எண்டு சொல்லியோ தங்களுக்குப் பிடிச்ச கடவுளுக்கு நேர்த்தி வைச்சு எங்கட ஆக்கள் காவடி எடுக்கிறவை. (அரசியல்வாதியளுக்கு எடுக்கிற காவடி இந்த லிஸ்ட்ல வராது) . அந்தக் காவடியளில பால்காவடி, பன்னீர்க் காவடி, செதில் காவடி, தூக்குக் காவடி, பறவைக் காவடி எண்டு ஊரிப்பட்ட வகையள் இருக்கு. ஒவ்வொருத்தரும் தங்கட காரியத்துக்காக எப்பிடிக் காவடி எடுக்கிறதெண்டு நேர்த்தி வைச்சினமோ அதின்படி எடுப்பினம்.

ஆனால் இப்ப என்னெண்டால் பப்ளிசிட்டிக்காகவும், தங்கட கெத்தைக் காட்டுறதுக்காகவும், மற்றவையின்ர கவனத்தை ஈர்க்க வேணும் எண்டதுக்காகவும் சிலர் விநோதமான காவடியளை எடுக்கினம். பேஸ்புக்கில ஒரு காவடி வீடியோ ஒண்டு பரவலா உலாவுது. யாழ்ப்பாணத்தில ஒருத்தர் உடம்பு முழுக்க செதிலுக்குப் பதிலா பென்னம் பெரிய வாள்களை குத்திக்கொண்டு, மேல வட்டமா சுத்திற மாதிரி டிசைன் பண்ணின பொறியில இருந்து காவடி எடுத்திருக்கிறார். அவரின்ர முதுகில வாள்களை குத்தி எடுத்ததால அவரால காவடியை தோளில வைச்சே சுமக்க முடியாமல் ஒரு பக்கவாட்டா வைச்சுத்தான் கொண்டு போறார். அப்பிடி அவர் றோட்டால இந்த வாள்காவடியோட பவனி வரேக்க எல்லாரும் நிண்டு , வேள்விக்கிடாயைப் பார்க்கிற மாதிரி அவரையும் பார்த்துட்டு பிறகு தங்களுக்குள்ள ஒரு நக்கல் சிரிப்பு சிரிச்சிட்டுப் போகினம்.

உண்மையில இப்பிடியான காவடியளுக்கு கோயில் நிர்வாகம் இடங்குடுக்கக் கூடாது. இதுகள் தான் நாளைக்கு பெடியள் வாள்வெட்டுக்காரரா வாறதுக்கு வழிவகுக்கிற விசயங்கள். இப்பிடி வாளை முதுகு முழுக்க செருகினால்தான் நீங்கள் நினைக்கிற விசயத்தை நிறைவேற்றுவன் எண்டு எந்தக் கடவுளும் சொல்றேலையே. இப்பிடி வாள்காவடி எடுக்கிறதெல்லாம் கடவுளுக்கே பிடிக்குமோ தெரியேலை. இந்தமுறை ஒராள் வாள்காவடி எடுக்க அடுத்தமுறை இதைப்பாத்திட்டு இன்னொரு ஆள், அலவாங்கு, பிக்கான், மண்வெட்டி எண்டு என்னென்ன இரும்பு ஆயுதங்கள் இருக்கோ அதுகளையும் முதுகில குத்திக்கொண்டு காவடி எடுத்து கெத்துக்காட்ட நினைக்கலாம். ஆனால் இப்பிடி விநோதமா காவடி எடுக்கிறதை மற்றவை பெரிசாப் பாப்பினம் எண்டு இவையள் நினைக்கலாம். ஆனால் அப்பிடி ஒருத்தரும் பாக்கிறேலை. குரங்கு வித்தையைப் பாக்கிறமாதிரித்தான் பாப்பினம். கெத்துக்காட்ட நினைச்சு கடைசியில உடம்பைப் புண்ணாக்கிறதுதான் மிச்சம். அப்பிடி வாள்காவடி எடுத்த ஒருத்தர் இப்ப ஆஸ்பத்திரியிலயாம். வாளைக்குத்துவானேன், வார்ட்டில கிடப்பானேன்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.5

நீர்வேலி வடக்கு குடியிருப்பு அருள்வளர் ஸ்ரீ ஞான வைரவ சுவாமி திருக்கோயில் ஜீர்ணோத்தாரண பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.14 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கர்மாரம்பமும், 7 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்காப்பும் இடம்பெற்று மறுநாள் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆதாயமான நாள். திட்டமிட்ட வேலைகளை நடத்தி முடிப்பீர். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். உங்கள் முயற்சி வெற்றியாகும் நாள். வழக்கு சாதகமாகும். உடல்நிலை சீராகும். பொருளாதார நிலையை உயர்த்த முயற்சி செய்வீர்கள் என்றாலும் யோசித்து செயற்படுவது நல்லது.

**இடபம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். உங்கள் செயலில் எதிர்பாராத நெருக்கடிகளை சந்திப்பீர். நன்மையான நாள். உங்கள் விருப்பம் பூர்த்தியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நெருக்கடிக்கு ஆளாகும் நாள்.

**மிதுனம்:** செயல்களில் நெருக்கடி உண்டானாலும் முடிவு சாதகமாகும். வருவாயில் இருந்த தடை விலகும். விருப்பம் பூர்த்தியாகும் நாள். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் வேலைகளை செய்து முடிப்பீர். எதிர்ப்பை சந்திக்கும் நாள்.

**கடகம்:** நிதானமாக செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து செயற்படுவீர். வருவாயால் வளம்காணும் நாள். திட்டமிட்டு செயற்படுவீர்கள். வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும்.

**சிம்மம்:** முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர். ஆதாயமான நாள். அடுத்தவரை நம்பி எந்தவொரு செயலிலும் இன்று ஈடுபட வேண்டாம். பெரியோர் வழிகாட்டுதல் இலாபம் தரும்.

**கன்னி:** போராட்டமான நாள். மனதில் குழப்பம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை ஒத்திவைப்பது நல்லது. மகிழ்ச்சியான நாள். நண்பர்கள் ஒத்துழைப்புடன் ஒரு செயலில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்.

**துலாம்:** அலைச்சல் அதிகரிக்கும் நாள். உங்கள் செயல்களில் தடைகளை சந்திப்பீர். விருப்பம் நிறைவேறும் நாள். எதிர்பார்த்த பணம் வரும். இழுபறியாக இருந்த ஒரு முயற்சி நிறைவேறும். அமைதி காக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம் :** உங்கள் செயலில் வேகம் இருக்கும். பொருளாதார நெருக்கடியை சமாளித்து இலாபம் காண்பீர். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும். உங்கள் முயற்சி நிறைவேறி ஆதாயத்தை உண்டாக்கும்.

**தனுசு:** முன்னேற்றமான நாள். உங்களது முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் நிலவிய குழப்பம் விலகும். நன்மையான நாள். சேமிப்பில் கவனம் செலுத்துவீர். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர்.

**மகரம்:** வியாபாரத்தில் சில நெருக்கடிகளை சந்திப்பீர். மனம் குழப்பமடையும். வருமானத்தால் வளம்காணும் நாள். தடைப்பட்டிருந்த செயல்கள் நிறைவேறும். சங்கடங்களுக்கு ஆளாகும் நாள். உங்கள் முயற்சி இழுபறியாகும்.

**கும்பம்:** பணிபுரியும் இடத்தில் எதிர்பாராத நெருக்கடிகள் தோன்றும். அனைத்திலும் எச்சரிக்கை அவசியம். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். வியாபாரத்தில் இலாபம் காண்பீர். உற்சாகம் அதிகரிக்கும்.

**மீனம்:** கவனமுடன் செயற்படவேண்டிய நாள். தொழில் போட்டியாளர்களால் சில சங்கடங்கள் தோன்றும். விருப்பம் நிறைவேறும் நாள். அலுவலகத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். உடல்நிலையில் இருந்த பாதிப்பு நீங்கும்.

# 'எடியூகேஷன் யாழ்ப்பாணம்'

நான்காம்கட்ட எடியூகேஷன்யாழ்ப்பாணம் நிகழ்ச்சி இந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட 'எடியூகேஷன் யாழ்ப்பாணம்' எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா பொது நூலகத்திலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்திலும் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் பல உயர் கல்வி வாய்ப்புகளுடன் வவுனியா மற்றும் யாழ்ப்பாண இளைஞர், யுவதிகளை சந்திக்க தமது குழு வர இருப்பதாக ICFS கல்வியின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஷர்மிளா சந்திரவதனி தெரிவித்தார்.

இந்த வருடமும் வடமாகாண மாணவர்களுக்கு IELTS தள்ளுபடிகள் மற்றும் புலமைப்பரிசில்கள் (SCHOLARSHIP) போன்ற சில விசேட சலுகைகளை வழங்கத்திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

'எடியூகேஷன் யாழ்ப்பாணம்' திட்டத்தின் சிறப்பு என்னவென்றால் மாணவர்களிடம் இருந்து கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது.

அதன்படி, ICFS EDUCATION ஆனது பல்கலைக்கழக ஸ்பாட் ஆப்பர் (spot offer) பெற்றுத் தருவது முதல் விசா நிலைவரை அனைத்துப் பணிகளையும் இலவசமாகச் ICFS Education Centre செய்யும்.

கடந்த ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி யாழ்ப்பாணம் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது உயர்கல்விக் கனவுகளை நிறைவேற்ற வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

தற்போது ICFS ஊடாக வெளிநாட்டில் கல்வி கற்கும் தமது கனவை நனவாக்கிய பெரும்பாலான யாழ்ப்பாண மாணவர்கள் கிரேட் பிரித்தானியாவை தமது இலக்காகத் தெரிவு செய்துள்ளனர்.

எனவே, இம்முறை DEMONFORNT UNIVERSITY, CONVERTY UNIVERSITY, GREENWICH UNIVERSITY, UNIVERSITY OF HULL, UNIVERSITY OF EAST ANGLIA, LEEDS BECKITYIV உட்பட பல இங்கிலாந்து பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளும் அதே நேரத்தில் யாழ்ப்பாண மாணவர்களை தொடர்பு கொண்டு அவர்களின் சந்தேகங்களையும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் தேவையான அறிவுரைகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளனர்.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை 08 ஆம் திகதி யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு ICFS மாணவ மாணவிகளுக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. முன்னதாக வெற்றிகரமாக நிறைவடைந்த கல்வி யாழ்ப்பாணம் 03 நிகழ்ச்சித்திட்டத்தின்போது நேர முகாமைத்துவத்தில் உள்ள சிரமங்களைக் குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுவதாக திருமதி ஷர்மிளா சந்திரவதனி சுட்டிக்காட்டுகிறார்.

இந்த நிகழ்வில் பங்குகொள்ளும் அனைத்து மாணவர்களும் அவர்களது பெற்றோரும் ICFS மற்றும் பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன் தனிப்பட்ட முறையில் விடயங்களை கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதால் நேரமுகாமைத்துவம் மிகவும் முக்கியமானது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லயம்பதி அலங்காரக் கந்தன் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் திருக்கல்யாண வைபவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. முருகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ரி-27)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.5

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும் இடம்பெறும்.

சைவப்புலவர், பிரசங்க பூஷணம் க. கைலநாதன் " அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் " எனும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. (ச-25)

# 'வவுனியாவின் குரல்' விண்ணப்பம் கோரல்

வவுனியா, செப்.5

வவுனியா பிரதேசசெயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து வவுனியா இசை ஆர்வலர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக "வவுனியாவின் குரல் 2024" என்ற நிகழ்வை நடத்துவதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

வவுனியா பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட இசை ஆர்வலர்கள் மாத்திரம் போட்டியில் பங்குபற்றமுடியும். 10-18 வயதுக்குட்பட்டோர், 18 வயதுக்கு மேற்பட்டோர் என இரு பிரிவுகளாகப் போட்டி நடைபெறும். பின்னணி இசைக்காக "கரோக்கி" பயன்படுத்திக்கொள்ளலாம்.

போட்டியில் பங்குபற்றுவோர் பிறப்பு சான்றிதழ் அல்லது தேசிய அடையாள அட்டை மூலம் வயதை உறுதிப்படுத்தவேண்டும். விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது Divisional Secretariat vavuniya அல்லது Vavuniya culture எனும் முகநூல் பக்கங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இறுதித்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஆளட்டும் ஆதிக்குடி!

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பெருமளவான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்பட்டாயிற்று. ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு, தமிழர்கள் தம்மைத் தாமே ஆளுகின்ற அதிகாரப் பகிர்வு, திரும்பப் பெறப்படாதவாறான மாகாண அதிகாரங்கள், முற்றுமுழுதான பதின்மூன்று, பதின்மூன்றுக்கும் அப்பால் என போட்டிபோட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் தத்தமது பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர். இலங்கையின் ஆகக்கூடிய அதிகார பீடத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக ஒரு தரப்பும், அதைத் தக்கவைக்க வேண்டும் என்பதற்காக இன்னொருதரப்பும் முட்டிமோதிக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு பேச்சுக்காகவேனும் அனைத்து இன மக்களுடைய அபிலாகைளும் செவிமடுக்கப்பட்டதா? என்று கேட்டால், 'இல்லை' என்பதே அதற்கான ஒற்றைப் பதில்.


தமிழ்ப் பொதுவேட்பாளரையும், இன்னும் ஓரிரு இடதுசாரிக் கொள்கையாளர்களையும் தவிர, ஏனைய அனைத்து வேட்பாளர்களுமே 'ஸ்ரீலங்கா ஒரு பௌத்த நாடு' எனும் சித்தாந்தத்தை இறுகப் பற்றியிருக்கின்றனர்'. மேற்குறிப்பிட்ட தமிழ் வேட்பாளரும், இடதுசாரித் தலைவர்களும்கூட இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தொடர்பில்தான் கூடுதலான கவனத்தைச் செலுத்தியிருக்கின்றனர். ஆனால், 'ஆதிக்குடிகள்' தொடர்பில் காத்திரமான திட்டங்கள் எதையும் எவரும் முன்வைத்ததாக இல்லை. காலாகாலமாக முன்னெடுக்கப்படும் சாக்குப்போக்கான சாராம்சங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர்த்து அவர்களை நாட்டின் அபிவிருத்தியுடனோ அல்லது அரசியல் உரிமைகளுடனோ இரண்டறக் கலக்கும் கொள்கைகளை எவரும் முன்வைக்கவில்லை.

ஆதிக்குடிகளின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தேவையான சட்டங்களை இயற்ற வேண்டும் என்று, ஆதிக்குடிகளின் தலைவரான ஊருவரிகே வன்னியலே அத்தோ தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். கடந்த வருடத்தில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை தொடர்ச்சியாகச் சந்தித்து தன்னுடைய வலியுறுத்தலை அவர் முன்வைத்த போதிலும் இன்னமும் அவர்களுக்குக் காத்திரமான விடிவொன்று கிட்டியதாகவில்லை.

*1963*ஆம் ஆண்டிலேயே, ஆதிவாசிகள் தொடர்பான கணக்கெடுப்பு இறுதியாக நடத்தப்பட்டது. அதன் பின்னர் இன்றளவும் இன்னொரு கணக்கெடுப்பு இடம்பெற்றதாயில்லை. அத்துடன், நாட்டின் பல்வேறு விடயங்களில் அல்லது தரவுத் தொகுப்புகளில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்பதுபோல் 'ஆதிக்குடிகள்' அடையாளப்படுத்தப்படுவதில்லை. அவர்கள் 'வேறு' என்ற சொற்பதத்தின் கீழ்தான் அடையாளப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நாட்டில், ஆதிமுதல் வாழ்ந்ததால்தான் அந்த மக்கள் கூட்டத்துக்கு 'ஆதிக்குடிகள்' என்று பெயர். காலமாற்றத்தாலும், இயந்திர மயப்படுத்தலாலும் நாம் 'நவீனத்துவங்களைக்' கண்டுவிட்டோம் என்பதற்காக, ஆதிக்குடி தன் அரசியலையும் உரிமையையும் அர்ப்பணித்தேயாக வேண்டும் என்று எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய நாடுகள் தத்தமது ஆதிக்குடிகளின் உரிமைகளை தற்போது மெல்ல மெல்ல உறுதிப்படுத்த ஆரம்பித்துள்ளன. ஆதலால்தான் அந்த நாடுகள் வளர்கின்றன. இப்போதும் கூட, சஸ்கட்சுவான் மாநிலத்தில் வாழும் ஆதிக்குடிகளுக்குக் கூடுதல் சலுகைகளை வழங்குவது தொடர்பில் கனடா பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், கடலும் 'கரையும், வனமும்' நிலமும், சனமும் 'இனமும், இடமும்' தடமும் அவனது.!






# நல்லிணக்க ஆணைக்குழு எவரையும் தண்டிக்காது!

கூறுகிறார் அலிசப்ரி

**கொழும்பு, செப்.5**

**உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு யாரையும் தண்டிக்கும் ஆணை கிடையாது.உண்மையைத் தீர்மானிக்க மட்டுமே அது அமைக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவரையும் தண்டிக்க நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு ஆணை இருக்காது. எனினும் உண்மையைத் தீர்மானிக்க மட்டுமே அது அமைக்கப்படும்.

ஆணைக்குழுவின் நோக்கங்களில், இலங்கையில் எங்கும் இடம்பெற்ற மோதல்களுடன் தொடர்புடைய மக்கள், சொத்துகள் மற்றும் உயிர்ச் சேதங்கள் அல்லது மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல், பரிந்துரை செய்தல் ஆகியவை அடங்கும். 1983 முதல் 2009 வரை வடக்கு மற்றும் கிழக்கில் உண்மை பேசுதல், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது- என்றார். (ச)

## போஷாக்கின்மையால் மூன்றிலொரு சிறுவர்

கொழும்பு, செப்.5

இலங்கையின் சிறுவர்களில் மூன்றில் ஒருவர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிக்கையொன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில்போஷாக்கின்மை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## மீளாய்வு பெறுபேறுகள் வெளியீடு

கொழும்பு, செப்.5

2023 (2024) ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை மீள் திருத்த பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வெளியிடப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் https://www.doenets.lk/ அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளங்களின் ஊடாகப் பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## 3 சட்டவரைவுகள் நிறைவேற்றம்

கொழும்பு, செப்.5

மூன்று சட்டவரைவுகள் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாம் மதிப்பீட்டு விவாத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதன்படி வெளிநாட்டுத் தீர்ப்புகளைப் பரஸ்பரம் அங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுயுறுத்துதல் சட்டவரைவு, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை சட்டவரைவு, வேலையாளர்களின் குறைந்தபட்சவேதனம் சட்டவரைவு என்பனவே நிறைவேற்றப்பட்டன. (ச)

## முப்படைக்கும் சம்பள உயர்வு

கொழும்பு, செப்.5

2025 ஜனவரி 1 முதல் அரச சேவையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உயர்த்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையின்படி, முப்படைகளிலும் பணியாற்றும் உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளமும் அதிகரிக்கப்படவுள்ளது. (ச)

## நாளை

**06.09.2024**

வெள்ளிக்கிழமை - ஆவணி - 21

சுபநேரம் : 06.04 - 07.34


ராகுகாலம் : 10.34 - 12.04

## நாளொரு நல்வார்த்தை

**மற்றவர்களின் உரிமைகளை அங்கீகரிக்க கற்றுக்கொள்ளும் வரை, ஒருபோதும் நாம் உண்மையான நாகரிகத்தைப் பெறப்போவதில்லை.**

*- வில் ரோஜர்ஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், 2022 / 2023 ஆம் ஆண்டுகளில் சங்கீத,நடனப்போட்டிகளில் தேசிய நிலையில் சாதித்த மாணவர்கள் ஆகியோருக்கான மதிப்பளிப்பு, மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல், வித்தியாலய கீதம் தொடர்பான இறுவட்டு வெளியீடு ஆகிய நிகழ்வுகள் அதிபர் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-25- 9)

## தள்ளுவண்டி கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.5

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய பாவனைக்காக இரண்டு தள்ளு வண்டிகள் வித்தியாலய பழைய மாணவர் காந்தரூபனால் கடந்த புதன் கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25-9)



## சூழல் பாதுகாப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.மாவட்டச் சுற்றாடல் குழுக்கூட்டம் மாவட்டபதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் நகர்ப்புறங்களில் காணப்படும் கழிவகற்றல் பிரச்சினைகள், திண்மக் கழிவு முகாமைத்துவம், மருத்துவக்கழிவு முகாமைத்துவம் மற்றும் மரநடுகைத் திட்டத்தில் ஏற்படும் சவால்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-25-66)






## கலாசார விழா

யாழ்ப்பாணம், செப்.5

யாழ். இந்துக் கல்லூரியின் நிறுவுநர் வாரத்தை முன்னிட்டு கலாசார விழா, கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள்பீட சமஸ்கிருதத் துறைத்தலைவர் கலாநிதி. மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா கலந்து கொண்டார். நிகழ்வில் கல்லூரியின் கவின்கலை மன்றத்தினரின் 'அரிச்சந்திர மயான காண்டம்' இசை நாடகம், தமிழருவி த.சிவகுமாரனை நடுவராகக் கொண்ட சொற்சமர், பல்லியம், குழு இசை, நடனச் சித்திரம், நாட்டார் பாடல் ஆகிய கலை, கலாசார நிகழ்வுகளும் அண்மையில் நடைபெற்றன. (ச-25- 66)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.5

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜால் விளக்கமளிக்கப்பட்டது. (ரி-66)

## விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப்.5

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிகளில் உணவைத் தயாரிப்பவர்கள் அடங்கிய55பேருக்குப்போஷாக்கான உணவு தயாரிப்பது தொடர்பான செய்முறை விழிப்புணர்வு நிகழ்வு கடந்த புதன் கிழமை நடத்தப்பட்டது. (ரி-66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.5

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக உற்சவம் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. 108 சங்காபிஷேகம், சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா இடம்பெறுமென ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-25,66)

# உமாகுமரனுடன் சிறீதரன் சந்திப்பு

லண்டன், செப். 5

பிரித்தானியாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழத்தமிழ் வம்சாவழியைச் சேர்ந்தவருமான உமா குமரனை இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரித்தா னிய நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இதன்போது, தமிழ்மக்களின் மீது இலங்கை அரசால் கட்டமைக்கப்பட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலை, அதற்கான நீதிப் பொறிமுறை, ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால இன ஒடுக்குமுறைகள், மக்களின் அடுத்தகட்ட எதிர்பார்ப்புகள் நோக்கிய அரசியல் முன்னகர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ச-25,113)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் தற்காலிக
இணைப்பில் பணியாற்றிய ஆசிரியை
அமரர்
திருமதி கிறிஸ்டினா டிலோ
கண்ணகுமார்
அவர்களின் ஆத்மா நித்திய
இளைப்பாறுதல் அடைய
பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
(CS/56110) J-1

**விதை நெல்**
**விற்பனைக்கு உண்டு**
அதிகூடிய விளைச்சலைக் கொண்ட மூன்றரை மாத B.G.34.6, மூன்று மாத V.G.312 இன
விதை நெல் விற்பனைக்கு உண்டு.
**077 659 2044**
(CR/43162) J-1


## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.5

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிபிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவப்பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. அடியார்கள் அனைவரையும் கலந்துகொண்டு இறையருள் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ச-25 , 17)

## புனராவர்த்தன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.5

நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையா கோவிலின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.15 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

## காப்பாற்றுமாறு கதறியவர் நாமல்

*நிமால் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.5

அரகலய போராட்டம் இடம்பெற்றபோது தம்மைக் காப்பாற்றுமாறு நாமல் ராஜபக்ச கதறி அழுதார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

போராட்டம் நடைபெற்றபோது அலரி மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்ட போது, என்னைக் காப்பாற்றுங்கள் என தொலைபேசி ஊடாக நாமல் அழுது புலம்பினார். இராணுவத் தளபதிக்கும் அவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

அன்றைய நிலைமைகளை மறந்து இன்று நாமல் ராஜபக்ச மார்தட்டிக் கொள்கிறார். நெருக்கடியான தருணத்தில் தம்மை மீட்ட ஜனாதிபதிக்கு நன்றி பாராட்டவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


# INVITATION FOR BID 2024/05
## Regional Directorate of Health Service Jaffna.

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of Primary Health Care System Strengthening Project (PSSP)-2024 and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.
2. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
"Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
5. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.
6. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services,No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
8. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
9. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | From 05.09.2024 until 18.09.2024 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 11.09.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 19.09.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2024/MSD/W/02 | Improvement of Drug Store Facilities at Base Hospital Tellippalai,Jaffna-Indoor & Drug Store | 0.97 | 70Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 10,000.00 | Till 05.12.2024 |
| NP/04/41/2024/LM/W/01 | Renovation of Blood Bank AT Base Hospital, Tellippalai,Jaffna | 1.51 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 05.12.2024 |
| NP/04/41/2024/LM/W/03 | Repair and Renovation of Nurshing Officers Quarters at Base Hospital,Point Pedro,Jaffna. | 5.65 | 109Days | C7and C8 (Buildings) | 3,500.00 | 57,000.00 | Till 02.01.2025 |

Chairman
Regional Procurement Committee
Regional Directorate of Health Service, Jaffna.

(CR/43158) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 07 . 1937



மறைவு
03 . 09 . 2024

## பொன்னையா திருநாவுக்கரசு

**(ஓய்வுநிலை ஆசிரியர் - கொழும்பு சென்தோமஸ் கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி)**

குப்பிளான் தெற்கு, குப்பிளானை பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருநாவுக்கரசு அவர்கள் நேற்றுமுன்தினம் (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஓய்வுநிலை ஆசிரியை நேசம்மா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், துசாந்தன் (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், சுபாஜினியின் (லண்டன்) அன்பு மாமனும், அபிராம், அபிஷயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ராசம்மா, நடராஜா, கந்தையா, சிவபாக்கியம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாவித்தாழ்வு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 163 0896**

(CR/43157) J-1

# பெயர் மாற்றம்

ஆவரங்கால் கிழக்கு புத்தூர் இல் வசிக்கும் **சடையன் சுசிலா** ஆகிய நான் எனது பெயரை **சடையன் சகிலா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சடையன் சகிலா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/56166) J-1

**சடையன் சகிலா**

# தவறவிடப்பட்டுள்ளது

கடந்த சில நாட்களுக்கு முன் தங்கராசா தங்கவேல் என்பவரது (19670991997) தேசிய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 378 3511**

(CS/56104) J-1

# சொற்பொழிவு

யாழ்., செப். 5

நவிண்டில் குழவியடி கண்ணகை அம்மன் ஆலய பூங்காவன நிகழ்வு இன்று வியாழக்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரபல ஆன்மிக பேச்சாளர் சொல்வேந்தர்.பொன். சுகந்தனின் 'சக்தி தரும் சக்தி' என்னும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

(ச)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## வன்னியசிங்கம் இராஜேஸ்கண்ணா

பிறப்பு 19.07.1971 — இறப்பு 05.09.2020



என் அன்பு ஆசை செல்வ மகனே
எத்தனை ஆண்டு சென்றாலும்
உங்களை என்னால் மறக்க முடியாது
என் உயிர் இருக்கும் வரை என்னுடன் இருப்பீர்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கடவைப்புலம்,
சுன்னாகம்.

அம்மா,
மனைவி, மகன்,
அண்ணன் குடும்பம்,
தங்கை குடும்பம்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
03 . 06 . 1940



இறப்பு
03 . 09 . 2024

## பஞ்சாட்சரம் பரமேஸ்வரி அம்மாள்

இலந்தைச்சாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் பரமேஸ்வரி அம்மாள் நேற்றுமுன்தினம் (03.09.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னக்குட்டி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும், நாகம்மா, காலஞ்சென்ற பொன்னம்பலவாணர் மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற நாகேசுவரராசா மற்றும் மகேந்திரராசா, அருந்தவராசா, சிவானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் நளினி, சிவகௌரி, சிவசோபனா ஆகியோரின் மாமியாரும், விதூஷ், நிரேஷ், நிஷா, அருண், தரண், அரண், தீரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கன்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 277 2983**

(CS/56109) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
13 . 01 . 1963



இறப்பு
03 . 09 . 2024

## விஜயலட்சுமி சண்முகவடிவேலு

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம்)**

யாழ்ப்பாணம் புத்தூரை பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி சண்முகவடிவேலு அவர்கள் நேற்றுமுன்தினம் (03.09.2024) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - இராசம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சபாபதி - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், சண்முகவடிவேலு அவர்களின் பாசமிகு மனைவியும் விசுவநாதன், மகாலட்சுமி மற்றும் காலஞ்சென்ற வைகுந்தநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், துஷீபன் (வைத்தியர் – யாழ் போதனா வைத்தியசாலை) . கீர்த்தனா (விடுதி நிர்வாகி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக்கல்லூரி), பிரணவன் (மென்பொருள் பொறியியலாளர் iLabs) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜேந்திரா (ஒழுக்காற்று அதிகாரி - யாழ் பல்கலைக்கழகம்), கஜனி (வைத்தியர் - தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், சாதனிகா, சனாதனிகா, சைலொளிபவன், சைதன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை 10.30 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**375/8, முத்துத்தம்பி ஒழுங்கை,**
**நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 406 3321**
**077 272 9286**

(CS/56107) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளை தண்டிக்க ஐ.நா.வின் அழுத்தம் அவசியம்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப்.5**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை தேவை, குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தடைகள் விதிக்கப்படவேண்டும் உள்ளிட்ட விடயங்கள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் உள்ளீர்க்கப்பட்டு அறிக்கை மீளாய்வு செய்யப்படவேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையும் ஐ.நா.வின் அங்கத்துவ நாடுகளும் இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்காக குரல் கொடுக்க முன்வரவேண்டும்- இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளைத் தொடர்ச்சியாக துன்புறுத்தும் செயற்பாடுகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். பொய்க்குற்றச்சாட்டுகளை சுமத்தி இவர்களை கைது செய்கின்றனர், அச்சுறுத்துகின்றனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பட்டியலில் இலங்கை முன்னணியில் திகழ்கிறது. இலங்கை பல தசாப்தங்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்தவோ, அதற்குப்பொறுப்பானவர்களை தண்டிக்கவோ முன்வரவில்லை.

கடந்த மே மாதம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வடக்கிலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்தித்து உரையாடியபோது, இவர்களில் பெரும்பாலானோர் படையினரின் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த பெண் ஒருவர் தெரிவிக்கையில், எனது கணவர் 2009ஆம் ஆண்டு இராணுவத்திடம் சரணடைந்தார். நான் இன்று வரை எனது கணவரைக் தேடி வருகிறேன். பாதுகாப்புப் படையின் தொடர் கண்காணிப்புக்கு நான் உட்படுத்தப்பட்டுள்ளேன். இதனால் நான் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். எனவே இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை தேவை, குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தடைகள் விதிக்கப்படவேண்டும். இந்த விடயங்கள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் இடம்பெறவேண்டும்- என்றார். (ச-6-25)



## ஐ. ம. சக்தி அலுவலகம் புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, செப்.5

ஐக்கிய மக்கள் சத்தியின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான மூன்றாவது தேர்தல் அலுவலகம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் முத்துச்சாமி லக்சிகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கலந்துகொண்டு அலுவலகத்தினை திறந்து வைத்தார். (ச -25-19)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'ஆலயம் தோறும் அறநெறிப்பாடசாலை' எனும் கோட்பாட்டுக்கமைய சோரன்பற்று கிராம அலுவலர் பிரிவில் பளை நெல்லிப்பள்ளம் கண்ணகை அம்மன் அறநெறிப்பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-9)



ஐரோப்பிய ஒன்றிய

## தேர்தல் கண்காணிப்புக் குழு யாழ்.மாவட்டத்துக்கு வருகை

யாழ்ப்பாணம், செப். 5

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை யாழ்.மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும், இதுவரை எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் நீண்டகால மேற்பார்வையாளர்களான நிக்கோலஸ் குசுலிஸ் மற்றும் ஜோஹான்னா வான் சம்பீக் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-66,9)



சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜே/196 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த விசேட தேவையுடைய பயனாளி ஒருவருக்கு உடுவில் பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து மூன்று சில்லு சக்கரவண்டியொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தனர். (ச-25- 66)



## பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணி ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 5

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கான நீர் வசதிகள், மின்சார வசதிகள், காணி அபிவிருத்தி மற்றும் சுற்றுலா அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. (ச-22,66-9)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கிராமமட்ட அதிகாரிகளுக்கான பால் மற்றும் பால்நிலை தொடர்பான மூன்று நாள் செயலமர்வு அண்மையில் பளை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் ஜெசாக் நிறுவனத்தால் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. (ச-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 08 . 1988



இறப்பு
02 . 09 . 2024

## பரமேஸ்வரன் ருக்ஷாந்

வேலணையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை (மூளாய்) வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் ருக்ஷாந் கடந்த 02.09.2024 திங்கட்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை - இராசம்மா மற்றும் சரவணமுத்து - இராசம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரன் - நேசமலர் தம்பதியரின் அன்பு மகனும், பாலச்சந்திரன் - மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யசோதை அவர்களின் பாசமிகு கணவரும், கவிஷ்னா (யாழ்ப்பாணக் கல்லூரி, தரம் - 05), கேசரன் (யாழ்ப்பாணக் கல்லூரி, தரம் - 01) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நமணன், அகல்யா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்திரன், கோபி, சயந்தன், அபிராமி, டிலக்ஷன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காளிகோவிலடி மூளாயிலுள்ள அவரது மாமனாரின் இல்லத்தில் இடம்பெற்று, வேலம்பராய் பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
மூளாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 926 5698, 077 379 5090

# மந்த போசணையை நீக்குவதற்கு அரசாங்கத்திடம் திட்டங்களில்லை

## நாடாளுமன்றத்தில் நேற்று சஜித் பிரேமதாஸ விளாசல்

கொழும்பு, செப். 5

இலங்கையில் சிறுவர்களிடையே மந்த போசணை அதிகரித்துச் செல்கின்றது. குழந்தைகளிடையே அதிகரித்துவரும் உணவுப் பாதுகாப்பின்மையை நீக்குவதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரான சஜித் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய போசணைக் கொள்கைத்திட்டம் என்ற ஒன்று நாட்டில் இல்லை. அதைச் செயற்படுத்தக்கூடிய முயற்சிகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

ஜனாதிபதியின் நிதியத்திற்கு கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்குவதற்கு முன்பாக குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்காக இவ்வாறான விடயங்களுக்கே நிதி ஒதுக்கப்பட வேண்டும். இவை எதுவும் இல்லாமல் ஜனாதிபதியின் நிதியத்துக்குக் கோடிக் கணக்கான பணத்தை ஒதுக்குவதற்கு அனுமதிக்க முடியாது.

நாட்டில் பலவிதமான சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவும், உறுப்பினர்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கும் பணம் உள்ளது. ஆனால் தேசிய போசணைக் கொள்கைக்காக பணம் இல்லை. அரசாங்கத்திடம் இவற்றுக்குத் தீர்வும் இல்லை. மாதாந்தம் மகாபொல கிடைப்பதும் இல்லை. மகாபொல பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம)

# மரண அறிவித்தல்



## வாமதேவன் ஞானசோதி

(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை)

கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் ஞானசோதி அவர்கள் கடந்த (02.09.2024) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - தாட்ஷாயினி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், வாமதேவன் (யாழ் போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும், சாம்பவியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சேதுபதி மற்றும் அமிர்தகௌரி, கலாகரன், உமாபதி, ஜெகசோதி (விமலி), கமலவதி, ரகுபதி, சீதாலட்சுமி ஆகியோரின் சகோதரியும், ஸ்ரீவனஜா, வரதராஜன், விஜயலஷ்சுமி, தயாபரன், வாகீசன், கலையரசி, பாமினி, கந்தசபேசன், பாக்கியநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 624 8327

கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(CS/1276) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 01 . 1945



மறைவு
04 . 09 . 2024

## அமரர் செல்லர் பேரின்பநாயகம்

ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் (பெருந்தெருக்கள் அபிவிருத்திச்சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை-குருணாகல் மாவட்டம்)

இராமலிங்கம் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவராகிய செல்லர். பேரின்பநாயகம் அவர்கள் நேற்று (04.09.2024) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் -பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா- சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், இராஜகுலதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நேசமலர், பரமேஸ்வரி, தேவமலர், செல்வநாயகம் மற்றும் குலநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் (ஆசிரியர்), துரை (அதிபர்), வைத்திய கலாநிதி யோகராஜா, மல்லிகாதேவி, சபாரட்ணம், டானியல் மற்றும் ரஞ்சிதேவராணி, அன்னலட்சுமி, அருமைநாயகம் (ஓய்வூதியர், யாழ். மாநகர சபை) ஆகியோரின் மைத்துனரும், ஹஜந்தன் (மாணவ ஒழுக்காற்று அதிகாரி, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்), நிமலவேணி (ஆசிரியர் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), மயூரதன் (J.P.கிராமசேவை உத்தியோகத்தர்.கந்தரோடை-J/200, புன்னாலைக்கட்டுவன் தெற்கு J/207), பிரதீபன் (உதவி முகாமையாளர் (கணக்காய்வாளர்), இலங்கை வங்கி, முல்லைத்தீவு மாவட்டம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மஞ்சுளா, சிவகுமார் (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை), சோபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்), கரோலினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுஷன், சுபிக்ஷா, அவினாஸ், தேனிஷா, தனுஷ், தனுஜனா, லினிஷா, சக்ஷித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இராமலிங்கம் வீதி, உடுவில் சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (06.09.2024) வெள்ளிக்கிழமை நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

பே. ஹஜந்தன் 077 922 6780
பே. மயூரதன் 077 429 3497
பே. பிரதீபன் 077 967 2509

(CS 1278) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயரிக்குப்...

பொலிஸாரால் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தற்போது சுவிஸ் நாட்டில் வசிக்கின்றார். 52 வயதாகும் அவர் ரிக்ரொக்கில் நேரத்தைச் செலவிடுவது வழமை. இந்தநிலையில் ரிக்ரொக்கில் உள்ள சுமார் 25 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் பெயரில் அவருடைய வட்ஸ் அப் கணக்குக்கு ரிக்ரொக் வீடியோக்கள் அனுப்பட்டுள்ளன. அதையடுத்து அவர்கள் இருவரும் தொடர்பாடல்களை ஆரம்பித்துள்ளனர். ரிக்ரொக் கணக்கில் பதிவேற்றப்பட்ட படங்களும் சுவிஸில் உள்ளவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவரும் தனது படங்களைப் பரிமாறிக்கொண்டுள்ளார்.

இந்தத் தொடர்பாடல் இறுக்கமடைந்த பின்னர், அந்தப் பெண் பல்வேறு தேவைகளைக் கூறி சுவிஸில் உள்ளவரிடம் பணம் பெற்றிருக்கின்றார். ரிக்ரொக் கணக்கு உள்ள அதே பெயரைக்கொண்ட வங்கிக் கணக்குக்கே இந்தப் பணப் பரிமாற்றம் நடந்திருக்கின்றது. சுவிஸில் உள்ளவரும் சுமார் 47 இலட்சம் ரூபாவரையில் கொடுத்திருக்கின்றார். அதன் பின்னர் அந்தப் பெண்ணின் தொடர்பாடல்கள் குறைய ஆரம்பித்துள்ளன. ஒரு கட்டத்தில் சுவிஸில் உள்ளவருக்கு சந்தேகம் ஏற்பட, அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருக்கின்றார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி குணறோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்கள் அதிர்ச்சியளிப்பவையாக இருந்தன.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ரிக்ரொக்கில் உள்ள பெண்ணைக் கண்டுபிடித்து அவரிடம் விசாரணையை முன்னெடுத்தனர். விசாரணையில் அவருக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரியவந்திருக்கின்றது. அதையடுத்து வங்கிக் கணக்கு இலக்கத்தை வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அரியாலையைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கைது செய்தனர். அந்தப் பெண்ணின் பெயரும், முதலெழுத்தும் ரிக்ரொக் கணக்கு வைத்திருக்கும் இளம்பெண்ணின் பெயர் முதலெழுத்தும் ஒன்றாக இருந்தன. அவரது வங்கிக்கணக்குக்கே பணம் மாற்றப்பட்டுள்ளபோதும், சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் தொடர்பாடலை மேற்கொண்டவர் அவர் இல்லை என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டது.

தொடர் விசாரணையில் 47 வயதுடைய மற்றொரு பெண் கைது செய்யப்பட்டார். அவரே சுவிஸ் நாட்டில் உள்ளவருடன் இளம் பெண் போன்று உரையாடிப் பணத்தைக் கறந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்தது. அத்துடன், இவர்களின் 'அன்ரி' என்று அடையாளப்படுத்தப்பட்ட இன்னொருவருக்கும் பணம் அனுப்பப்பட்டுள்ளது. அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மூன்று பெண்களும் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள். ரிக்ரொக் பெண்ணின் பெயரும், தனது நண்பியின் பெயரும் ஒன்றாக இருப்பதைப் பயன்படுத்தி 47 வயதுப் பெண் இந்தத் திட்டத்தைத் தீட்டியுள்ளார். சுவிஸ் நாட்டில் உள்ளவர் முன்னொரு தடவை யாழ்ப்பாணம் வந்தபோது, கிடைத்த அறிமுகத்தைக் கொண்டே அந்தப் பெண் திட்டம் தீட்டிப் பணத்தை கறந்துள்ளமையும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, பணத்தை மீள வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதையடுத்து அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது. (அ-எ-26)

## ரணில்....

சலவை செய்யப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. அழிவைத் தடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் ஒன்றுபடவேண்டும் என்று கைகளைக் கூப்பிக் கேட்டுக் கொள்கிறேன் - என்று வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அருந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- "நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டிருப்பார். ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் இந்த நாடாளுமன்றத்தை நிச்சயம் கலைப்பார். ஆகவே இன்றைய அமர்வு இறுதி அமர்வாகக் கூட இருக்கலாம்.

மிகவும் கவலையுடன் உரையாற்றுகிறேன். நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகிறது. இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்ற தரப்பினர் ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பாக இளைஞர்களை மூளைச் சலவை செய்து 75 ஆண்டு காலம் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் மற்றும் அரசாங்கங்கள் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை என்று பொய்யுரைத்து, அதனை மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளார்கள்.

நாட்டு மக்களைத் தவறாக வழி நடத்தி நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதைக் காணமுடிகிறது. நாட்டையும், நாட்டு மக்களையும் அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் இந்தத் தருணத்தில் ஜனநாயகத்தை மதிப்பவர்களும், அதனைப் பாதுகாப்பவர்களும் நாடாளுமன்றத்தை தீ வைக்க முற்பட்டவர்களுக்கு இடமளிக்கக்கூடாது. ஜனநாயகத்துக்காக ஒன்றுபடவேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான தரப்பினருக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு எதிராக எவரும் செயற்படக்கூடாது.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், விடுதலைப் புலிகள் போராட்டத்திலும் வடக்கு மற்றும் தெற்கில் இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். தற்போதும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு மூளைச் சலவை செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேர்தலில் தோல்வியடைந்ததன் பின்னர் மீண்டும் போராட்டத்துக்குச் செல்லவும், வீடுகளை தீயிடவும் பேசுவதாயின் அது பாரதூரமானது. இன்று (நேற்று) முதல் நான் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ளேன். இந்த நாட்டை அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கும் தரப்பினரை தோற்கடிக்க முடியும். இதற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பேன்" - என்றார். (அ-ம-சி)

## 4 குற்றவாளிகளுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்கு ஒன்பது குற்றங்களுக்கும் 66 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் 53 நபர்களுக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2013ஆம் ஆண்டுமுதல் மன்னார் மேல் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று வந்தது.

இந்த வழக்கில் குற்றவாளிகளாக நால்வர் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, அவர்களுக்கு 66 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் இரண்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-60)

## கைவிடப்பட்ட...

என்ற அந்த முதியவர் தற்போது, மானிப்பாய் வீதியில் உள்ள உதயதாரகை சனசமூக நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார். ஒரு காலில்லாத நிலையில் உள்ள அவரைப் பொறுப்பேற்பதற்கு எந்தவொரு முதியோர் இல்லங்களும் இதுவரை முன்வரவில்லை. இதையடுத்து, கிராம மக்கள் இணைந்து கிராம அலுவலருக்கு எழுதிய கடிதத்தின் விளைவாகவும், தொடர் நடவடிக்கைகள் காரணமாகவும் அந்த முதியவரை, பொருத்தமான முதியோர் இல்லத்தில் சேர்க்கவேண்டும் என்று ஜே/88 கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் சிபாரிசு செய்திருந்தார்.

எனினும், எந்தவொரு முதியோர் இல்லங்களும் அவரைப் பொறுப்பேற்க முன்வராததைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர் பளையிலுள்ள முதியோர் இல்லத்தில் அந்த முதியவரை இணைத்துக் கொள்ளுமாறு கடிதம் வழங்கியுள்ளார். நீண்டநாள்களாக அல்லலுற்றுக் கொண்டிருந்த முதியவருக்கு தங்க ஓரிடம் கிடைத்தமையே போதும் என்ற நிலையில், கிராம மக்கள் இணைந்து பெரும் நிதிச் செலவில் அந்த முதியவரை பளையிலுள்ள மேற்படி முதியோர் இல்லத்துக்குக் கொண்டு சென்றனர். எனினும், அங்கும் அவருக்கு இடம் வழங்கப்படாததையடுத்து, அவர் மீண்டும் மீண்டும் உதயதாரகை சனசமூக நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

இதையடுத்தே அவர், எந்தவொரு முதியோர் இல்லங்களோ, அமைப்புகளோ அல்லது நிறுவனங்களோ பொறுப்பேற்காத பட்சத்தில் குறைந்தபட்சம் தன்னைக் கருணைக் கொலையாவது செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது கடிதத்தின் பிரதிகளை அவர், வடக்கு மாகாண ஆளுநருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளருக்கும், கொட்டடி கிராம அலுவலருக்கும் அனுப்பி வைத்துள்ளார். (அ-ம-22)

## உள்நாட்டுப்...

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அநுரகுமார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நாடு ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறது. நாட்டு மக்கள் அனைவர்க்கும் ... ஒரு பொருளாதாரத் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளோம். எமது ஆட்சியில் இனவாதம், மதவாதம் என்பவற்றுக்கு இடமில்லை. ஒரு சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குவதே எமது இலக்கு. ஊழலை ஒழித்து, வரிகளைக் குறைத்து, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதே எமது நோக்கம்.

நாங்கள் இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டியுள்ளது. குறிப்பாக சக்தி (வலு) துறையில், மீள் புதுப்பிக்கத்தக்க காற்று மின்சார உற்பத்தியில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. மன்னாரில் அதானி குழுமம் முதலீடு செய்துள்ளது. ஆனால் உரிய முறையில் கேள்விப்பத்திரம் கோரப்படவில்லை. நாங்கள் உரிய முறையில் கேள்விப்பத்திரம் கோரி அதானியின் திட்டத்தைப் புதுப்பிப்போம். வெளிநாட்டு முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் உரிய முறையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும்.

எமது ஆட்சியில் நிறைவேற்று அதிகார முறை ஒழிக்கப்படும். வடபகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை எதுவித நிவாரணமும் கிடைக்கவில்லை. உள்நாட்டு பொறிமுறையினூடாக தமிழர்கள் எதிர்பார்க்கும் பொறுப்புக்கூறல், உண்மைத்தன்மை போன்ற விடயங்களை அமுல்படுத்துவோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ரணில் - மைத்திரி அரசாங்கத்தில் முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் - என்றார். (அ-ம-6)

## வட்டுக்கோட்டையில்...

இரண்டு மோட்டார்சைக்கிள்கள் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. மோட்டார் சைக்கிளின் பின்னிருக்கையில் அமர்ந்து பயணித்த முதியவர் படுகாயங்களுக்கு உள்ளாகி மயக்கமடைந்த நிலையில், அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## மாதகலில்...

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மாதகல் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 25 வயதான இரு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்காகப் படகொன்றில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை கடலுக்குச் சென்றிருந்தனர். நேற்றுக்காலை 6.45 மணியளவில் படகு திடீரெனக் கடலில் கவிழ்ந்து மூழ்கிய நிலையில் ஒருவர் காணாமற்போயுள்ளார். மற்றையவர் கரையை நோக்கி நீந்திவந்த நிலையில் மீனவர்கள் அவரை மீட்டுக் கரைசேர்த்தனர். காணாமற்போன மீனவரைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26-555-27-66)

## நாடெங்கும்...

மாவட்டச் செயலக அதிகாரிகளும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும், பொலிஸாரும் தமது தபால்மூல வாக்குகளைப் பதிவு செய்யும் நாளாக நேற்றையதினம் அறிவிக்கப்பட்ட நிலையில், நாடளாவிய ரீதியில் வாக்குப் பதிவுகள் விறுவிறுப்பாக இடம்பெற்றன. இன்றும், நாளையும் குறித்தொதுக்கப்பட்ட பிரிவினருக்கான வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-110)

# இலஞ்சம் பெற்ற இரு பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கிளிநொச்சி, செப்.5

பொதுமகன் ஒருவரிடம் 5 ஆயிரம் ரூபாவை கையூட்டாக வாங்க முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் நேற்று முன்தினம் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைவாக விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் இருவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த இருவரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-27,113)

# தொழுநோய் பாதிப்பை ஒன்றுபட்டு அகற்றுவோம்

## ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, செப். 5

**ஒரு முக்கியமான பிரச்சினையாக நாட்டில் தொழுநோய் காணப்படுகிறது. இலங்கையர்களின் ஆரோக்கியத்தையும் கண்ணியத்தையும் பாதுகாப்பதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் சுமார் 1,550 பெரியவர்களும் 173 குழந்தைகளும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மைய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த எச்சரிக்கை ஏற்படுத்தும் புள்ளிவிவரம், ஒரு வலிமையான மற்றும் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் தேவையை வலியுறுத்துகிறது.

தொழுநோயைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலமும், அதன் அறிகுறிகளைப் புரிந்துகொள்வதன் மூலமும், சமூக நலத் திட்டங்களில் பங்கேற்பதன் மூலமும் இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு ஒவ்வொரு குடிமகனையும் நான் அழைக்கிறேன். இந்நோய் பற்றிய தவறான புரிதல்களை அகற்றுவதை மிகவும் முக்கியமாகக் கருதுகிறோம்.

ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கும் ஒரு நோய்க்கு எதிரான இந்தப் போராட்டத்தில் உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது - என்றுள்ளது. (ச-27)

# மனைவியுடன் இணைய மரத்திலேறி போராட்டம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, செப்.5

தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி நபர் ஒருவர் மரத்தில் ஏறி போராட்டம் மேற்கொண்டமையால் வவுனியா நகரில் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மரத்தின் மீதேறியே அவர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவரிடம் விசாரித்தபோது தனது மனைவி தன்னை விட்டுப் பிரிந்துசென்றுள்ளதாகவும் அவரை தன்னுடன் சேர்த்துவைக்குமாறும் தெரிவித்துள்ளார். பின்னர் பொலிஸார் மற்றும் ஏனைய தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் மரத்தில் இருந்து கீழே இறங்கினார். (ச-110)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்றுப் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச-25,66)

# 10 வயது...

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை, பெரியவிளான் பகுதியில் பத்து வயதான பாடசாலை மாணவியை அவரது தந்தை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தி வருவதாக இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவியை மீட்ட பொலிஸாருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். கைதான தந்தையை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ம-66)


# தவறவிடப்பட்டது

01.09.2024 நல்லூர் தேர் அன்று வழிபாட்டில் பங்குபற்றிய பின்னர் திரும்புகையில் மண்ணிற அடையாள அட்டை கவர் தவறவிடப்பட்டுள்ளது. இதனுள் 620460842v இலக்க தேசிய அடையாள அட்டை, NDL442878 இலக்க சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கலான ஆவணங்கள் உண்டு. இவற்றினை கண்டு எடுத்தவர்கள் தொலைபேசி இல 071 543 8526 உடன் தொடர்பு கொண்டு அவற்றினை பெற உதவவும்.

# வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உணவகம் ஒன்றிற்குப் பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **வரவேற்பாளர் - பெண்.**
  (தமிழ், ஆங்கிலம் தெரிந்திருத்தல் வேண்டும்).
- **உணவு பரிமாறுபவர் - பெண்.**
  துறை சார்ந்த கல்வியறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- **சமையல் உதவியாளர் - ஆண் / பெண்.**

ஆர்வமுடையவர்கள் சுயவிபரக் கோவையையும், Passport size புகைப் படத்தையும் கீழ்வரும் Whatsapp இலக்கத்திற்கு / மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். Email :- aplusbiriyani@gmail.com


(CS/56108) J-1

**077 765 4320**

# மரண அறிவித்தல்

## அமரர் மங்கையற்கரசி இலகுநாதன்

தோற்றம் 02.07.1947 — மறைவு 04.09.2024



இணுவில் ஆஸ்பத்திரி இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலகுநாதன் மங்கையற்கரசி நேற்று புதன்கிழமை (04.09.2024) அன்று காலமானார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் ஆஸ்பத்திரி,
இணுவில் மேற்கு.

(CS 1279) V-1

தகவல்: குடும்பத்தினர்.

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் **6 பரப்புக் காணி-நிலப்பரப்பு** விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 1/2 KM தூரம்.
- வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்தது.
- உரும்பிராய்ச் சந்தியில் இருந்து கைதடிச் சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன். தொடர்புகளுக்கு:

**077 2880 152**
**077 2941 521**

CS (1277) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.